[1983 பிப்ரவரி 11

சலவை தொழிலாளர் 'துணியைத் துவைத்து நம்மிடத்திலே கொடுக்கிறான். அதைமட்டும் போட்டுக்கொண்டு அப்படியே விட்டு விட முடியுமா ?உள்ளே பனியன் போட வேண்டியிருக்கிது. அந்தப் பனியனை நாம் சுத்தம் செய்துதா போட்டுக் கொள்ள வேண்டும். இல்லை யென்றால் வியர்வை நாற்றம் அடிக்கும். எனவே எல்லாவற்றிற்குமே சலவைத் தொழிலாளியை நம்பி யிருக்கமுடியுமா ? பனியனைத் துவைக்க வேண்டும்; சட்டையை மாற்ற வேண்டும். ஆகவே, அரசுசெய்ய வேண்டிய காரியங்களை அரசு செய்யும். அதற்கு அங்கே குடியிருப்பவர் கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தெரு வைச் சுத்தம் செய்வது, பப்ளிக் லெட்ரினைச் சுத்தம் செய்வது ஆகிய இவைகளையெல்லாம் அரசு செய்து கொண்டுதான் இருக் கிறது. இன்னும் என்னென்ன செய்ய வேண்டுமென்று மாண்பு மிகு உறுப்பினர்கள் கருத்துக்களை வழங்குவார்களேயானால்,

It is receptive to public suggestions என்பதை எற்கெனவே சொல்லியிருக்கிறேன்.

திரு. கு. மணி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பேசும் போது * * என்ற வார்த்தையைப் பயன்படுத்தி னார்கள். அதை அவைக் குறிப்பிலேயிருந்து எடுத்துவிட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அந்த வார்த்தையை எடுத்துவிட்டு, சலவைத் தொழிலாளி என்று வைத்து விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * என்ற சொல்

அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்பட்டு, சலவைத் தொழிலாளி என்று மாற்றப்படுகிறது.

*வினா எண் 230—திரு. சி. கோபால்: மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

சென்னை நகரில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக கட்டிக் கொடுக்கப்படும் ஒரு வீட்டின் மதிப்பு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம் : சென்னை நகரில் குடி சை மாற்று வாரியத்தின் மூலமாகக் கட்டி கொடுக்கப்படும் ஒரு வீட்டின் தற்போதைய மதிப்பு ரூ. 14,400 ஆகும்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.